# அதிராம்பட்டினம் நகர்மன்றம்
## <u>சாதாரணக் கூட்டம்</u>

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 15-ம் தேதி திருவள்ளுவர் ஆண்டு 2053 (2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற நகராட்சி மன்றக் கூட்ட நடவடிக்கைகள்

---

**<u>பொருள் எண்</u>**. 1

அதிராம்பட்டினம் பேரூராட்சி மன்ற முன்னாள் பொறுப்பு தலைவர் திரு.துரை.பாஞ்சாலன் அவர்கள் 10.04.2023 அன்று இயற்கை எய்தியதை முன்னிட்டு அன்னாருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற கோரி வரப்பெற்றுள்ள 16வது வார்டு உறுப்பினர் திருமதி. பி. நான்சி விஜயசுந்தரி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 431 / 2023/ அ2) |

**<u>தீர்மான எண் - 01</u>**

அலுவலக குறிப்பினை ஏற்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண்</u>**. 2

அதிராம்பட்டினம் நகராட்சியில் உள்ள 7 நடுநிலைப்பள்ளிகளை நகராட்சியிடம் ஒப்படைத்து பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தீர்மான எண். 234/ 22. 12. 2022 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கீழ்காணும் பள்ளிகளை அதிராம்பட்டினம் நகராட்சி வசம் மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதி பெற்று ஈர்த்துக்கொள்ள மன்றம் அங்கீகரிக்க.

| வ. எண். | பள்ளியின் விபரம் |
|---|---|
| 1 | அதிரை எண். 1 தொடக்கப்பள்ளி |
| 2 | அதிரை எண் 2 தொடக்கப்பள்ளி |
| 3 | அதிரை கடற்கரை தெரு தொடக்கப்பள்ளி |
| 4 | அதிரை அண்ணா தெரு தொடக்கப்பள்ளி |
| 5 | அதிரை மேலத்தெரு நடுநிலைப்பள்ளி |
| 6 | அதிரை நடுத்தெரு நடுநிலைப்பள்ளி |
| 7 | அதிரை கரையூர் தெரு நடுநிலைப்பள்ளி |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 210 / 2022/ அ2) |

**<u>தீர்மான எண் – 02</u>**

அலுவலக குறிப்பினை ஏற்று பள்ளிகளை நகராட்சி ஈர்த்துக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண்</u>**. 3

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்..192, நாள்..30.11.2022ல் இந்நகராட்சிக்கு சொந்தமானதும் பாத்தியப்பட்டதுமான பேருந்து நிலையம் கட்டண கழிவறை வசூல் உரிமத்திற்கு 01.12.2022 முதல் 31.03.2023 வரை முதலாம் ஆண்டு உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் 31.03.2023 உடன் முடிவடைந்து விட்டது.

அரசாணை (நிலை) எண்.. 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்..03.07.2007 ல் குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை உள்ள

உரிமத்திற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பேருந்து நிலையம் கட்டண கழிவறை வசூல் உரிமம் ஏற்கனவே உரிமம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர் திருமதி.எம்.சாந்தி என்பவர் தொடர்ந்து நடத்த சம்மத கடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே, மேற்கண்ட குத்தகைதாரர்களுக்கு 01.04.2023 முதல் 31.03.2024 வரை மற்றும் 01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>குத்தகை இனங்களின் விபரங்கள்</u>

| வரிசை எண் | குத்தகை இனங்கள் | ஏலதாரர் பெயர் (திருவாளர்கள்) | 01.12.2022 முதல் 31.03.2023 வரை ஏலத்தொகை( மாதம் ஒன்றிற்கு) ரூ. | 01.04.2023 முதல் 31.03.2024 வரை 5 சதவீதம் உயர்த்தப்படும் ஏலத்தொகை(மாதம் ஒன்றிற்கு) ரூ. | 01.04.2024 முதல் 31.03.2025 வரை 5 சதவீதம் உயர்த்தப்படும் ஏலத்தொகை( மாதம் ஒன்றிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் கட்டண கழிவறை வசூல் உரிமம் | எம்.சாந்தி | 12950 | 13598 | 14278 |
| அலுவலக குறிப்பு | | அ)மன்றம் அனுமதி வழங்கலாம். | | | |
| | | ஆ)பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..258/2022/அ1) | | | |

**<u>தீர்மான எண் – 03</u>**

அலுவலக குறிப்பினை ஏற்று பேருந்து நிலைய கட்டண கழிவறை வசூல் செய்யும் உரிமம் அதே குத்தகைதாரருக்கு 5% உயர்த்தி உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அங்கீகரிக்கிறது.

**<u>பொருள் எண்</u>**. 4

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்..34, நாள்..06.05.2022ல் இந்நகராட்சிக்கு சொந்தமானதும் பாத்தியப்பட்டதுமான 1.) பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் உரிமம், 2.) சாலையோர அங்காடி வசூல் உரிமம் ஆகியவற்றிற்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை முதலாம் ஆண்டு உரிமம் முடிவடைந்து விட்டது.

அரசாணை (நிலை) எண்.. 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்..03.07.2007 ல் குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, 1.) பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் உரிமம், 2.) சாலையோர அங்காடி வசூல் உரிமம் ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே உரிமம் எடுத்து நடத்தி வரும் ஏலதாரர்கள் குத்தகையினை தொடர்ந்து நடத்த சம்மதகடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே, மேற்கண்ட குத்தகைதாரர்களுக்கு 01.04.2023 முதல் 31.03.2024 வரை மற்றும் 01.04.2024 முதல்

31.03.2025 வரை வழங்க 5 சதவீதம் உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

குத்தகை இனங்களின் விபரங்கள்

| வரிசை எண் | குத்தகை இனங்கள் | ஏலதாரர் பெயர் (திருவாளர்கள்) | 01.04.2022 முதல் 31.03.2023 வரை ஏலத்தொகை ரூ. | 01.04.2023 முதல் 31.03.2024 வரை 5 சதவீதம் உயர்த்தப்படும் ஏலத்தொகை ரூ. | 01.04.2024 முதல் 31.03.2025 வரை 5 சதவீதம் உயர்த்தப்படும் ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் உரிமம் | சி.ஜீவானந்தம் | 53500 | 56175 | 58984 |
| 2 | சாலையோர அங்காடி வசூல் உரிமம் | எம்.சுந்தர்ராஜ் | 225000 | 236250 | 248063 |
| அலுவலக குறிப்பு | | அ.)மன்றம் அனுமதி வழங்கலாம். | | | |
| | | ஆ.)பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..148/2022/அ1) | | | |

**தீர்மான எண் – 04**

அலுவலக குறிப்பினை ஏற்று பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் சாலையோர அங்காடி வசூல் செய்யும் உரிமம் அதே குத்தகைதாரருக்கு 5% உயர்த்தி உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 5

அதிராம்பட்டினம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider / agency / contractor மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை - 28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/EA2 SWM-18 நாள்.10.01.2023-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | அதிராம்பட்டினம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider / agency / contractor மூலம் மேற்கொள்ளுதல் | ரூ.1,86,77000 /- | 1. Green Agro Environment Services, Maduranthagam<br>2 S. R. Enterprises, Chennai | 0.09 % குறைவு<br>0.13 % அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Green Agro Environment Services, Maduranthagam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கொடுத்துள்ள Green Agro Environment Services, Maduranthagam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந. க. எண். 190 / 2022/ சி1) |

**<u>தீர்மான எண் – 05</u>**

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service provider / Agency / Contractor மூலம் பணிமேற்கொள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Green Agro Environment Service, Maduranthagam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்பிள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கிறது.

**<u>பொருள் எண்</u>**. 6

இந்நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 8 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 1387 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு காலை உணவு தயார் செய்வதற்கு வார்டு 4 அண்ணாதெருவில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுதொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 4 அண்ணாதெருவில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டும் பணி | ரூ. 28,50,000/– | 1. எஸ். சுல்தான் அப்துல் காதர், அதிராம்பட்டினம்<br>2 வி. கல்யாண சுந்தரம், பட்டுக்கோட்டை | குறைவு<br>அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். சுல்தான் அப்துல் காதர், அதிராம்பட்டினம் என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கொடுத்துள்ள திரு. எஸ். சுல்தான் அப்துல் காதர், அதிராம்பட்டினம் என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்<br>(ந. க. எண். 418 / 2022/ இ1) |

**<u>தீர்மான எண் – 06</u>**

அலுவலக குறிப்பினை ஏற்று அண்ணா தெருவில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். சுல்தான் அப்துல் காதர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கிறது.

**<u>பொருள் எண்</u>**. 7

இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டம் 2022-2023ன் கீழ் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுதொ | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|---|---|

| . | | கை ரூ. | | (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | மிலாரிக்காடு (163001S001), சால்ட் லைன் 8வது தெரு (163004S022) , புதுமனைதெரு(163007L016), புதுமனைத்தெரு 3வது உள் குறுக்கு சாலை (163007R048), மேலத்தென்புறம் 7வது குறுக்கு தெரு (163020L026), மரைக்கா குளம் ரோடு (163009R069), மேலத்தெரு குறுக்கு ரோடு (163009R067) ஆகிய சாலைகளுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | ரூ. 37,50,000/– | 1. எஸ். நவாஸ்கான், அதிராம்பட்டினம்<br><br>2 வி. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை | குறைவு<br><br>அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். நவாஸ்கான், அதிராம்பட்டினம் என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கொடுத்துள்ள எஸ். நவாஸ்கான், அதிராம்பட்டினம் என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந. க. எண். 418 / 2022/ இ1) |

**தீர்மான எண் – 07**

அலுவலக குறிப்பினை ஏற்று 15th நிதிக்குழு மானிய திட்டம் 2022-23 கீழ் பணிக்கு மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எஸ். நவாஸ்கான் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 8

இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டம் 2022-2023ன் கீழ் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் . | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | ஹாஜா நகர் (163022R150), இரயில்வேஸ்டேசன் ரோடு (163022R169) ஆகிய சாலைகளுக்கு தார்சாலைகள் அமைத்தல் | ரூ. 10,00,000/– | 1. வி. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை<br><br>2 எஸ். நவாஸ்கான், அதிராம்பட்டினம் | குறைவு<br><br>அதிகம் |

மேற்கண்டவாறு ஒவ்வொரு பணிக்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. வி. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கொடுத்துள்ள திரு. வி. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை என்ற ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று |

| | |
|---|---|
| | மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந. க. எண். 418 / 2022/ இ1) |

**தீர்மான எண் – 08**

அலுவலக குறிப்பினை ஏற்று 15th நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ஹாஜா நகர் மற்றும் இரயில்வே ஸ்டேஷன் ரோடு ஆகிய சாலைகளுக்கு தார்சாலை அமைக்கும் பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. வி. கல்யாணசுந்தரம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமிதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 9

இந்நகராட்சியின் பொது சுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் 6 LCV வாகனங்கள் சர்வீஸ் செய்தமைக்கான செலவினத்தொகை ரூ. 15595/- மற்றும் மினிலாரி வாகனத்தின் பழுதுகளை சரிசெய்வதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்<br>(ந. க. எண். 426 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 09**

அலுவலக குறிப்பினை ஏற்று 6 LCV வாகனங்கள் சர்வீஸ் செய்தமைக்கு தொகை ரூ. 15595/-ஐ யும் மினிலாரி வாகனத்தில் பழுதுகளை சரிசெய்தமைக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 10

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள், பேப்பர்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்குவதற்கு பொதுநிதியில் செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>(ந. க. எண். 426 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 10**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 11

இந்நகராட்சி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாருதல், குப்பைகளை பையோ மைனிங் செய்தல் மற்றும் சாலைகளில் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள முட்செடிகளை அப்புறப்படுத்துதல் ஆகிய அத்தியாவசிய பணிகளை ஜே. சி. பி. மூலம் மேற்கொள்ள 2023-2024ம் ஆண்டிற்கு பொதுநிதியில் செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>(ந. க. எண். 426 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 11**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 12

இந்நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் சிமெண்ட் பேக்டரிக்கு அனுப்ப நகராட்சியில் போதிய வாகன வசதி இல்லாததால் வாடகை லாரி மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் அனுப்பி வைக்கவும், அதற்கான செலவினம் ரூ. 20,000/- பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 429/ 2023/ அ2) |

**தீர்மான எண் – 12**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 13

இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் – 8 நபர்கள், கணிணி இயக்குபவர் – 1 நபர், ஓட்டுநர் – 4 நபர்கள், இரவு காவலர் – 1 நபர் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் – 1 நபர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து ஊதியம் வழங்கிட மன்ற அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 430/ 2023/ அ2) |

**தீர்மான எண் – 13**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 14

இந்நகராட்சியின் 11வது வார்டு வெற்றிலைக்காரத்தெரு மற்றும் காலியார் தெரு மக்கள் பயன்பெறும் வகையில் 25000/- லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்து தரக்கோரி வரபெற்றுள்ள 11 வது வார்டு உறுப்பினர் திருமதி. மு. இஸ்மாயில் நாச்சியா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 431 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 14**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 15

இந்நகராட்சியின் 16வது வார்டு சுப்பிரமணியர் கோவில் தெரு பகுதியில் MSR கடையின் எதிர்புறமும், அய்யாவு மேஸ்திரி வீட்டின் பின்புறமும் உள்ள 2 இடங்களிலும் சுமார் 200 மீ நீளமுள்ள வடிகால் அமைத்து தரக்கோரியும், சுப்ரமணியர் கோவில் தெருவில் 2 சிறிய பாலங்கள் அமைத்து தரவும் கோரி வரப்பெற்றுள்ள 16வது வார்டு உறுப்பினர் திருமதி. பி. நான்சி விஜயசுந்தரி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 431 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 15**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 16

இந்நகராட்சியின் 19வது வார்டு பகுதியில் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி வரப்பெற்றுள்ள 19வது வார்டு உறுப்பினர் திருமதி. ஹெச். தில்நிவாஸ் பேகம் அவர்களின் கடிதம் மன்றத்திஅன் பார்வைக்கு.

1, பெரிய ஜும்மா பள்ளி முதல் தக்வா பள்ளி வரை வடிகால்

2. ஜும்மா பள்ளி ஆட்டோ ஸ்டாண்ட் பின்புறம் உள்ள 100மீ மண்சாலையை தார்சாலையாக மாற்றித்தர கோருதல் மேலும் செய்னாங்குளம் வரை புதிய கழிவுநீர் வடிகால் அமைத்து தரக்கோருதல்.

3. ஹோண்டா ஷோரூம் பின்புறம் 100மீ மண் சாலையை தார்சாலையாக மாற்றி வடிகால் அமைத்து தரக் கோருதல்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 435 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 16**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 17

இந்நகராட்சியின் 24வது வார்டு கடற்கரை தெரு சவுரியப்பா சந்து பழுதடைந்துள்ள மண்சாலையினை பேவர் பிளாக் சாலையாக மாற்றம் செய்து தருமாறும், அப்பகுதியிலுள்ள வடிகால் மூடி உடைந்து அடைப்புகள் ஏற்பட்டுள்ளதனை சரி செய்து தருமாறு கோரி வரப்பெற்றுள்ள 24வது வார்டு உறுப்பினர் திரு. அ. அப்துல் மாலிக் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 437 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 17**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 18

இந்நகராட்சியின் 26வது வார்டு பி.வி.எஸ். மில் அருகில் புதிதாக அமைக்கப்பட்ட மேல்புறம் உள்ள சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 26வது வார்டு உறுப்பினர் திரு. சி. வடிவேல் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 439 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 18**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 19

இந்நகராட்சியின் 12வது வார்டில் நடுத்தெரு கடைசி சந்து மற்றும் அதன் குறுக்கு சந்தில் 230மீ சிமெண்ட் சாலையாக அமைத்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 12வது வார்டு உறுப்பினர் திருமதி. ராளியா முஹம்மது சைபுதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 451 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 19**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 20

இந்நகராட்சியின் 25வது வார்டு சிவன் கோவில் தெருவில் ரூ. 9.50 இலட்சம் மதிப்பீட்டில் 200 மீ மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 25வது வார்டு உறுப்பினர் திரு. வி. ராக்கப்பன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 441 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 20**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 21

இந்நகராட்சியின் 9வது வார்டு பகுதியில் 4 இடங்களில் 300மீ மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 9-வது வார்டு உறுப்பினர் திரு. அ. அப்துல் ஹலீம் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 445 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 21**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 22

இந்நகராட்சி அலுவலக தபால்கள் அனுப்புவதற்கு தேவையான அஞ்சல் வில்லைகள் வாங்குவதற்கான செலவினம் ரூ. 3000/- ஐ மன்றம் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 446 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 22**

அலுவலக குறிப்பினை ஏற்று அஞ்சல்வில்லை வாங்க மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள் எண்**. 23

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள் வாடகை நிலுவை செலுத்தாத 22 கடை ஏலதார்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்வதற்காக ரூ.7,64,068/-ஐ செலுத்தக்கோரி வரப்பெற்றுள்ள நகராட்சி வழக்கறிஞர் செல்வி.என்.உஷா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 448 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 23**

அலுவலக குறிப்பினை ஏற்று பேருந்து நிலைய கடைகள் வாடகை நிலுவை செலுத்தாத 22 கடை ஏலதாரர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள் எண்**. 24

இந்நகராட்சி 22வது வார்டு சேக் உதுமான் தெரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அருகாமையில் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் 7மீ நீளமுள்ள சிறுபாலம் மற்றும் இரயில்வே ஸ்டேசன் ரோட்டில் ரூ. 4.50 இலட்சம் மதிப்பீட்டில் 7மீ நீளமுள்ள ஒரு சிறுபாலமும் அமைத்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 22வது வார்டு உறுப்பினர் திருமதி. செ. ஜாஸ்மின் செய்யது முகம்மது அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 413 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 24**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 25

இந்நகராட்சி 21வது வார்டு ஹாஜா நகரில் தியாகு வெல்டிங் ஒர்க்ஷாப் பின்புறம் மற்றும் கடற்கரை தெரு மையவாடி ஒட்டியுள்ள பகுதியில் 300 மீட்டர் மூடியுடன் கூடிய வடிகால் மற்றும் ஹாஜா நகர் ரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலையில் உள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதனால் அதனை மாற்றி புதிய பாலம் அமைத்து தர கோரி வரப்பெற்றுள்ள 21வது வார்டு உறுப்பினர் திரு. இஜட். அகமது மன்சூர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம். |

| | |
|---|---|
| | (ந. க. எண். 433 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 25**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 26

இந்நகராட்சி 27வது வார்டு பகுதியில் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தர கோரி வரப்பெற்றுள்ள 27வது வார்டு உறுப்பினர் திரு. வீ. க. சேதுராமன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

1. கரையூர் தெருவில் 25 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டு பழுதடைந்துள்ள 850 மீ சிமெண்ட் சாலை புதிதாக அமைத்து தரக் கோருதல்.
2. அதிராம்பட்டினம் நகராட்சிக்கு அருகிலுள்ள இளங்கோ நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம், சாலைவசதி, பொதுமின்விளக்குகள் போன்ற அடிப்படை தேவைகள் முற்றிலும் இல்லாமல் உள்ளதனால் இப்பகுதியை நகராட்சியுடன் இணைப்பதற்கு நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் அனுப்பக் கோருதல்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பரிசீலனை செய்யலாம்.<br>(ந. க. எண். 457 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 26**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கிறது.

**பொருள் எண்**. 27

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி இனங்களை ஏப்ரம் 30ம் தேதிக்குள் செலுத்தி ஊக்கத்தொகை பெற அறிவுறுத்தி அறிவிப்புகள் அச்சடித்தமைக்கு ரூ. 700/-, பிளக்ஸ் அச்சடித்தமைக்கு ரூ. 1700/- மற்றும் ஆட்டோ விளம்பரம் செய்தமைக்கு ரூ. 3000/- செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 456 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 27**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 28

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் மின்மோட்டார்கள் பழுது ஏற்படும் சூழ்நிலையில் பதிலி மின்மோட்டார்கள் இல்லாததால் கீழ்காணும் மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் வாங்க மன்றம் அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும்.

1. 10 HP நீர்மூழ்கி மோட்டார் – 4 Nos.
2. 7.5 HP நீர்மூழ்கி மோட்டார் – 2 Nos.
3. 1 HP நீர்மூழ்கி மோட்டார் – 2 Nos.
4. 10 HP நீர்மூழ்கி மோட்டார் ஸ்டார்ட்டர் – 5 Nos.
5. 7.5 HP நீர்மூழ்கி மோட்டார் ஸ்டார்ட்டர் – 2 Nos.
6. 1 HP நீர்மூழ்கி மோட்டார் ஸ்டார்ட்டர் – 2 Nos.
7. 35 HP Openwell மோட்டார் ஸ்டார்ட்டர் – 1 Nos.
8. 25 HP Openwell மோட்டார் ஸ்டார்ட்டர் – 1 Nos.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 465 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 28**

அலுவலக குறிப்பினை ஏற்று குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் மின்மோட்டார்கள் மற்றும் ஸ்டார்ட்டர் வாங்க மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள் எண்**. 29

இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் உதரிபாகங்கள் இல்லாததால் கீழ்காணும் மின்உதிரி பாகங்கள் வாங்க மன்றம் அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும்.

1. 20W LED Fittings – 100 Nos.
2. 60W LED Fittings – 80 Nos.
3. Timer – 50 Nos.
4. LED Drive 30W – 50 Nos.
5. 60 Watts LED Drive – 10 Nos.
6. Ladder 14 ½ Feet – 3 Nos.
7. 10mm ALU Wire – 2 Coil
8. PVS TAP Role – 100 Nos.
9. 2 AMPS Fues Carrier-10 Nos

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 466 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 29**

அலுவலக குறிப்பினை ஏற்று தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு உதிரிபாகங்கள் வாங்க மன்றம் அங்கீகரிக்கிறது

**பொருள் எண்**. 30

இந்நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண். 66/4சி1-ல் பேருந்து நிலையம் அருகில் உள்ள வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் செயல்பட்டு வரும் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதனால் அதனை இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்திற்கு கடிதம் அனுப்ப இயக்குநருக்கு மன்றம் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 456 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 30**

அலுவலக குறிப்பினை ஏற்று மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள் எண்**. 31

இந்நகராட்சியில் பொது சுகாதார ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு. ஆ. ஜேசுமாணிக்கம் என்பவருக்கு 20 வருடங்கள் நல்லமுறையில் பணியாற்றியமைக்கான தங்கப்பதக்கம் வழங்க செயல்முறை ஆணை எண். 18313/ 2022/ ஜே.2 நாள். 09. 03. 2023 ல் ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி நபருக்கு ரூ. 29900/- செலுத்தக்கோரி THE TAMILNADU HANDICRAFTS DEVELOPMENT CORPORATION LTD. என்ற நிறுவனத்தின் மூலம் பட்டியல் பெறப்பட்டுள்ளதை பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 456 / 2023/ அ2) |

**தீர்மான எண் – 31**

அலுவலக குறிப்பினை ஏற்று இந்நகராட்சி பொது சுகாதார ஓட்டுநர் திரு.ஆ. ஜேசுமாணிக்கம் என்பவருக்கு 20 வருடங்கள் நல்ல முறையில் பணியாற்றியமைக்கு தங்கப்பதக்கம் வழங்க ரூ.29900/-ஐ The Tamilnadu Handicrafts Development Corporation Ltd என்ற வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 32

**இந்நகராட்சி** அலுவலகத்தில் உள்ள பழுதான கணிணிகளை சர்வீஸ் செய்வதற்கும், பழுதான பிரிண்டர் டோனர்களை சர்வீஸ் செய்து ரீபில் செய்வதற்கும் ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | **மன்றம்** அனுமதி வழங்கலாம்.<br>(**ந. க. எண்.** 456 / 2023/ **அ**2) |

**தீர்மான எண் – 32**

அலுவலக குறிப்பினை ஏற்று டோனர்களை சர்வீஸ் செய்ய மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்**. 33

அதிராம்பட்டினம் நகராட்சி மூலம் TAMILNADU INSTRITUTE OF URBAN STUDIES COIMBATORE பயிற்சி நிறுவனத்திற்கு 2021- 2022 மற்றும் 2022-2023 க்கான ஆண்டு நிர்வாக பங்குத்தொகை ரூ. 60000/- பொதுநிதியில் வழங்க மன்ற அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | **மன்றம்** அனுமதி வழங்கலாம்.<br>(**ந. க. எண்.** 457 / 2023/ **அ**2) |

**தீர்மான எண் – 33**

அலுவலக குறிப்பினை ஏற்று Tamilnadu Institute of Urban Studies Coimbatore என்ற பயிற்சி நிறுவனத்திற்கு 2021-2022 மற்றும் 2022-2023 ஆண்டுக்கான நிர்வாக பங்குத்தொகை ரூ.60,000/- செலுத்த மன்றம் அனுமதி அளிக்கிறது

நகர்மன்ற தலைவர்

அதிராம்பட்டினம் நகராட்சி